# நந்திக் கலம்பகம்

315

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்து முதன்மாணவரும்
சென்னை அடையாற்று நே. தி. காலேஜ்
தமிழாசிரியரும் ஆகிய

**பண்டித. அ. கோபாலையரால்**

பரிசோதிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை
மதுரை.

1927

இதன் விலை அணா ஆறு.

# பொருளடக்கம்.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| க. | முகவுரை. | I-IV |
| உ. | நந்திக்கலம்பகம். | 1–22 |
| ௩. | சிலபிரதிகளில் அதிகமாகக்காணப்பட்ட பாட்டுக்கள். | 23–26 |
| ௪. | அரும்பதவுரையும் துறைக்குறிப்பு முதலியனவும். | 27–32 |
| ரு. | வசைக்குறிப்புக்கள். | 33 |
| சா. | பாட்டுமுதற்குறிப்பகராதி. | 34 |

# முகவுரை.

'நந்திக்கலம்பகம்' என்பதற்கு நந்தியைக்குறித் தியற்றப்பட்ட கலம்பகம் என்று பொருள்கொள்ளலாம். இதிற் கூறப்பட்ட நந்தி, பல்லவவமிசத்தரசர்களில் ஒருவன். பல்லவவமிசத்தின் வரலாற்றை ஸ்ரீமான். பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களெழுதிய பல்லவர்சரித்திரம் என்னும் நூலிற் பரக்கக் காணலாம். இப்பல்லவ அரசர் கி. பி. 200 முதல் 900 வரையில் தென்னிந்தியாவிலேயிருந்து அரசாண்டனர். இவர்களுக்குப் பிரதான நகரம் காஞ்சீபுரம்.

மேற்கூறிய (கி. பி. 200—900) 700 ஆண்டுகளிலே முற்பாதி முழுதும் இவர்களது ஆட்சி இங்கே முற்றும் நிலைபெறாமல் தடுமாறிக்கொண்டிருந்தது. பிற்பாதியிலே முழுதும் நிலைபெற்றது. இவர்கள் மகேந்திரன்முதலாகப் பத்துத்தலைமுறை யரசாண்டார்கள். இவர்களுக்குள்ளே, இக்கலம்பகத்தலைவனாகிய நந்தி எட்டாந்தலைமுறையாக வந்து கி. பி. 830 முதல் 854 வரை 24 ஆண்டு அரசாண்டானென்பர். இவன்பெயர் 'நந்திப்போத்தரையன்' என்றும் வழங்கப்பெறும். நந்திவர்மபல்லவமல்லன் என்பவன் இவனுக்குப் பாட்டன்.

மேற்கூறிய நந்திவர்மபல்லவமல்லன் காலமுதல் இந்நூலின்தலைவன்காலம்வரையுள்ள மூன்றுதலைமுறைகளிலும் தமிழ்நாட்டு மூவேந்தருள்ளே பாண்டியர் செழித்தோங்கியிருந்தனர்; ஏனைச் சேர சோழ ரிருவரும் பாண்டியருக் குட்பட்டிருந்தனர். பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் அடிக்கடி போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. இப்போர்களிற் சிற்சிலசமயம் பாண்டியருடன் சேர சோழர்களும் சேர்ந்துகொள்வர்.

பாண்டியருள்ளே சிவபத்தியிலும் வீரத்திலும் சிறந்துவிளங்கிய வரகுணபாண்டியன், பல்லவராட்சியிலிருந்த தொண்டைநாட்டின்மீது படையெடுத்துவந்து நந்திப்போத்தரையன்தந்தையாகிய தந்திவர்மனை வென்று பெண்ணையாற்றின்கரையிலுள்ள அரைசூரிற் சிலகாலம் வீற்றிருந்தான். அச்சமயம், தந்திவர்மன் காலமாய்விட, அவன்மகனாகிய நந்திப்போத்தரையன் பட்டத்துக்குவந்தான். இவன் பட்டத்திற்கு வந்தவுடனே பாண்டியரின் ஆதிக்கியத்தைத் தொலைத்துவிடவேண்டு

மென்றெண்ணி, வரகுணபாண்டியன்மேற் படையெடுத்துச்சென்று காஞ்சிபுரத்திற்குத் தெற்கே 30 மைல்தூரத்தில் வந்தவாசித்தாலூகாவி லுள்ள 'தெள்ளாறு' என்னுமிடத்திற் சந்தித்துக் கடும்போர்புரிந்து வெற்றிபெற்றான். அதுமுதல் இவனுக்குத் 'தெள்ளாறெறிந்தநந்தி' என்னும் பட்டப்பெயர் வழங்குவதாயிற்று.

அப்பால் இவன் அவ்வரகுணனைப் பின்றொடர்ந்து பல்வேறிடங்க ளிலும் பொருது வெற்றிபெற்றுச் சோணாடுமுழுதுந் தன்வசமாக்கிக் கொண்டான். அவ்வாறு இவன் பொருதஇடங்கள்:—பழையாறு, வெள் ளாறு, கடம்பூர், குருக்கோட்டை, வெறியலூர், தொண்டி முதலியன வென்பது இந்நூலா லறியப்படும். தமிழ்மூவேந்தரையும் ஒருகாலத் தில் இவன் வென்றதாகவும், இவன் றம்பிமார்களே ஒருசமயம் வேறு பலவீரர்களை யிவன்மே லேவிப் பொருது தோற்றதாகவும் இக்கலம்பகத் தின் 42, 81-ஆம் பாட்டுக்களாற் றெரியவருகின்றன.

இப்பொழுதுகிடைக்கும் பாரதவெண்பாவைப்பாடிய 'பெருந்தேவ னார்' என்பவர் இவன்காலத்திருந்து இவனா லாதரிக்கப்பட்ட பெரும் புலவரென்பது,

"வண்மையாற் கல்வியான் மாபலத்தா லாள்வினையா
லுண்மையாற் பாரா ளுரிமையாற்—றிண்மையாற்
றேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ
டியார்வேந்த ரேற்பா ரெதிர்."

என இவர்பாடியுள்ள 'பரிபாலகர்புகழ்ச்'செய்யுளா லறியக்கிடக்கின்றது.

இனி, கலம்பகமென்பது—ஒருபோகு, வெண்பா, கலித்துறை என் பவற்றை முதலிற்கொண்டு, புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டும் பிறவும் உறுப்புக்களாய் விரவிவர, ஆசிரியப்பா, கலிப்பா, ஆசிரியவிருத்தம், கலி விருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை முதலியவற் றாற் பாடப்படுவதொரு பிரபந்தம். இத னிடையிடையே வெண்பாவும் கலித்துறையும் மடக்குடைச்செய்யுளும் பயின்றுவரும். இது முற் றும் அந்தாதித்தொடையாகவும், இறுதியும் முதலும் மண்டலிக்கவும் பாடப்பெறும். இதன் பாடற்றொகை தேவர்க்கு நூறும், அந்தணர்க் குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதும் ஆகும். இக்கலம்பகம் அரசனுக்குரியதாகலின் 90 பாடல்கொண்டதாயிற்று.

இக்கலம்பகத்தை ஆக்கியவர் பெயர் இன்னதென்று விளங்கவில்லை. இந்நந்திவர்மனுக்குத் தம்பிமார் பகைவராயிருந்தனரென்பது முன்னரே காட்டப்பட்டது; அவரு ளொருவன் தன் தமையனை வீரத்தினாலும் வஞ்சனையினாலும் கொல்லமுடியாமைகண்டு, வசைபாடிக் கொல்ல வெண்ணி இப்பிரபந்தத்தைப் பாடிமுடித்து, இதிலிருந்து ஒருபாட்டை நந்தி ஊர்வலம்வருங்கால் அவன்காதில்விழும்படி ஒரு தாசியைக்கொண்டு இசையுடன் பாடச்செய்ததாகவும், அதனைக் கேட்டு மகிழ்ந்த நந்தி எல்லாப்பாட்டுக்களையுங் கேட்கவிரும்பி, மந்திரிமுதலாயினோர் தடுத்துரைக்கவுங் கேளாமற் பாடச்செய்து கேட்டு மாண்டதாகவும் ஒரு கதை வழங்கி வருகிறது. இக்கதை 'நந்தி கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்' எனச் 'சோமேசர் முதுமொழிவெண்பாவினாலுங் குறிக்கப்படுகிறது. இக்கதைக்கேற்ப இக் கலம்பகப்பாட்டுக்கள் பலவற்றிலும் வசைச்சொற் போன்ற சொற்கள் காணப்படுதலுங் கவனிக்கத்தக்கது. இக்கதையெல்லாம் பொய்யென்பர் ஒருசாரார்.

இப்பொழுது கிடைக்கும் கலம்பகங்களுக்குள் இதுவே காலத்தால் முற்பட்டதென்னலாம். இதில் நந்தியின் கல்வி, கொடை, வீரம் முதலியன சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன. முன்னே காட்டிய 81-ம் பாட்டிலே இவன் "செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து மாயச் செருவென்ற பாரி" எனப் பாரியாக உருவகப்படுத்தப்பெற்றிருத்தலாலும், இவன்காலத்துக்குக் கொஞ்சம் முன்னேயிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்றுகூறியிருத்தலாலும் இவர்கள்காலத்திற் பாரியின்சரித்திரம் பிரசித்தமாயிருந்ததென்பது விளங்குகின்றது.

இக்கலம்பகம் சொன்னயம் பொருணயமுதலியனகொண்டுவிளங்குதல் உற்றுநோக்குவார்க்கெல்லா மினிது விளங்கும். இதனீற்றுச்செய்யுளிரண்டும் 76-ம் செய்யுளின் பிற்பாதியும் கிடைக்கவில்லை. பழைய அச்சுப்பிரதியிலும், சில கையெழுத்துப்பிரதிகளிலும் இக்கலம்பகத்துக்கியைபில்லாத சிலபாடல்கள் ஏற்றிச் சேர்க்கப்பட்டிருந்தன. அவற்றையிப்பொழுது தனியே பிரித்து நூலின்பின்னே பதிப்பித்திருக்கிறேன்.

நான் கலிங்கத்துப்பரணியை அச்சிட்டுமுடித்தவுடனேயே இதனைத் தொடங்கவேண்டுமென்று நண்பர்சிலர் என்னைத் தூண்டினர் அச்சமயம் சென்னைச் சருவகலாசாலைச் சரித்திரஆசிரியராகிய ஸ்ரீமான். ராவ் ஸாஹேப் டாக்டர். S. கிருஷ்ணஸாமிஐயங்காரவர்களும, இப்பொழுது டில்லியிலிருக்கும் (Statistical Assistant, Indian Stores Department) ஸ்ரீமான். **T. J.** குமாரஸாமிஐயரவர்களும் தம்மிடமிருந்த

இந்நூலின் காகிதக்கையெழுத்துப்பிரதிகளை அன்புடன் தந்துதவினார்கள். அப்பால் என்வேண்டுகோளுக்கிணங்கித் திருவனந்தபுரம் (Retired High Court Judge) ஸ்ரீமான் **K. G.** சேஷையரவர்கள் தங்களிடமிருந்த காகிதக்கையெழுத்துப்பிரதியொன்றை யனுப்பி என்னை அடிக்கடி ஊக்கினார்கள். இப்பிரதி, வேறிரண்டுபிரதிகளோடு ஒப்புநோக்கித் திருத்தப்பெற்றதாயும், சிறந்தபாடங்களையுடையதாயுமிருந்தது. அங்ஙனமிருந்தும், வேறுசில நல்லபிரதிகள்கிடைத்தாலன்றி அச்சிடலாகாதென்றெண்ணி யிவ்வேலையை நிறுத்திவைத்திருந்தேன்.

அப்பால், சென்றஆண்டிலே நான் மதுரைக்குப்போயிருந்தபொழுது மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் இதன் ஏட்டுப்பிரதி யிரண்டிருப்பது தெரிந்து, அவற்றையும்வைத்து ஒப்புநோக்கித் திருத்தினேன். பின்னர் ஒருவாறு அச்சிட்டுமுடிக்கலாமென்ற துணிவுண்டாயிற்று.

மதுரையில் ஒப்புநோக்கினகாலத்தில், என்னுடனிருந் துண்மைப் பாடங்கண்டுதவியவர்கள்,—மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் மகாவித்துவானுமாகிய ஸ்ரீமான். சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களும், ஷை சங்கக்கலாசாலையாசிரியர் ஸ்ரீமான். பண்டித சு. ஹரிஹரஐயரவர்களுமாவர். இதனை யச்சிடுங்காலத்தும் அன்னார் அன்புடனுதவினர். அன்னாருதவிகளினாலேதான் இஃது இவ்வளவிலேனும் வெளிவந்ததென்னலாம்.

மேலேகாட்டியவண்ணம் பலவகையிலும் உதவிபுரிந்த அன்பர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதன்றி வேறொன்றும் யான் செயத்தக்கதாகக் காண்கிலேன்.

தமிழ்நூல்களை யச்சிடுதற்கண் எனக்கு ஊக்கமுண்டாக்கி அவ்வப்பொழுது உபகரித்துவருபவர்களும், தொல்புகழ்ப் பாண்டித்துரையெனத் தமிழை மல்குறப்புரக்குமாண்புடைக்குரிசிலுமாகிய ஸ்ரீமான். **T. C.** ஸ்ரீநிவாஸஐயங்காரவர்கள் இதனைச் செந்தமிழ்ப்பிரசுரமாக்கியுபகரித்தார்கள். அதனால், அப்பெருந்தகையாளர்க்கும், மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கும் என்றும் நன்றிசெலுத்துங் கடப்பாடுடையேன்.

இச்சிறுநூலைச் சிறியேன் வெளியிடுதற்குத் தோன்றாத்துணையாய் நின்றியக்கியருளிய ஆலவாயானடிக்கமலங்களை யனவரதமும் வந்தித்து வாழ்த்துகின்றேன்.

"செந்தமிழ்மந்திரம்"
மயிலாப்பூர்.
அக்ஷய௵ கார்த்திகைமீ

இங்ஙனம்,

அ. கோபாலையன்.

உ

# நந்திக்கலம்பகம்.

## பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மும்மைப் புவன முழுதீன்ற முதல்வி யோடும் விடைப்பாக
[1]னம்மை தருக முத்தமென வழைப்ப வாங்கே சிறிதகன்று
தம்பின் முத்தங் கொளநோக்கிச் சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்த்தாளெஞ் சென்னி மிசையிற் புனைவாமே.

தரவுகோச்சகக்கலிப்பா.

பொருப்பரையன் மடப்பாவை புணர்முலையின் முகடுதைத்த
நெருப்புருவம் வெளியாக நீறணிந்த வரைமார்ப
பருப்புரசை மதயானைப் பல்லவர்கோ னந்திக்குத்
திருப்பெருக வருளுகநின் செழுமலர்ச்சே வடிதொழவே.

வஞ்சித்துறை.

[2]கரியின் முனம்வரு, மரியின் மலர்பத,
முருகி நினைபவர், பெருமை பெறுவரே.

நேரிசைவெண்பா.

திருவாணி யைக்குருவைத் [3]தென்முனியைப் போற்றத்
தருவாணி யாண்மையிறை சாரு—முருவாணி
யைங்கரனைச் சங்கரனை யாறுமுகத் தோனுமையைப்
பங்கில்வைப்பார்க் கில்லைப் பவம்.

பாயிர முற்றிற்று.

---

(பிரதிபேதம்) [1] அம்மைதருக. [2] கரியின்இடர்தொலைத்த, வரியின்பெருமையை. [3] தென்றன் முனியைத்.

# நூல்.

## மயங்கிசைக் கோச்சகக்கலிப்பா.

மண்டலமா யம்பரமாய் மாருதமாய் வார்புனலா
யொண்சுடரா யொளியென்னு மோருருவ மூன்றுருவ
1மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் றிகழ்வடிவோ
2செவ்வடிவோ பொன்வடிவோ சிவனேநின் றிருமேனி;

*[அருவரையி னகங்குழைய வனலம்பு தெரிந்தவுணர்
பொருமதில்க ளவை 3மூன்றும் பொன்றுவித்த புனிதற்குங்
குருமணிசே ரணிமுறுவற் குலக்கங்கை நதிபாயத்
திருமுடியைக் 4கொடுத்தாற்குஞ் செம்பாகந் திறம்பிற்றே;]

இலகொளிய மூவிலை 5வே லிறைவாநின் னியற்கயிலைக்
குலகிரியு மருமறையுங் குளிர்விசும்பும் வறிதாக
வலைகதிர்வேற் படைநந்தி யவணி 6நா ராயணனிவ்
வுலகுடையான் றிருமுடியு முள்ளமுமே யுவந்தனையே.

(இவை தாவு.)

செழுமலர் 7துதைதரு தெரிகணை மதனன
தெழிலுடல் பொடிபட வெரிதரு நுதலினை;

அருவரை யடியெழ முடுகிய வவுணன
தொருபது முடியிற வொருவிர னிறுவினை.

(இவையிரண்டும் அராகம்.)

வீசிகையிற் கொன்றையும் வெள்ளெருக்கும் விராய்த்தொடுத்த
வாசிகையி னூடேவெண் மதிக்கொழுந்தைச் சொருகினையே;

பாய்புலியி னுரியசைத்த பலபுள்ளிப் படிவமெலா
மாயிரவாய்க் கருங்கச்சை யழலுமிழ வசைத்தனையே;

---

(பி-ம்) 1மால்வடிவோ. 2சேல்வடிவோ. *இஃது இடைச்செருகலெனத் தோற்றுகின்றது. 3கன்றப் பொன்றுவித்த முனிவர்க்கும். 4கொடுத்தார்க்கும், 5வேளல்லானின், 6நாராயணனும். 7துதியிரு.

சோர்மதத்த வார்குருதி சோணநீ ரெனத்துளிப்ப
வேர்மதத்த கரியுரிவை யேகாச மிட்டனையே;

திசைநடுங்கத் தோன்றிற்று நீயுண்ட திறனஞ்ச
முயிர்நடுங்கத் தோன்றிற்று நீயுதைத்த வெங்கூற்றம்.

(இவை நான்கும் தாழிசை.)

அனைத்துலகிற் பிறப்பு நீ, யனைத்துலகி லிறப்பு நீ,
யனைத்துலகிற் றுன்பமு நீ, யனைத்துலகி லின்பமு நீ;

வானோர்க்குத் தாதையு நீ, வந்தோர்க்குத் தந்தையு நீ,
யேனோர்க்குத் தலைவனு நீ, யெவ்வுயிர்க்கு மிறைவனு நீ.

(இவை முச்சீ ரோரடி யெட்டம்போதரங்கம்.)

ஊழி நீ, யுலகு நீ, யுருவு நீ, யருவு நீ,
யாழி நீ, யமுத நீ, யறமு நீ, மறமு நீ.

(இவை இருசீரோரடியெட்டம்போதரங்கம்.)

எனவாங்கு, (இது தனிச்சொல்.)

ஒருபெருங் கடவுணிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
[1]விடையுடன் மங்கல விசயமு நடப்ப
வொருபெருந் தனிக்குடை நீழ
லரசுவீற் றிருக்க வருளுக வெனவே. (க)

(இஃது ஆசிரியச்சுரிதகம்.)

நேரிசைவெண்பா.

எனதே கலைவளையு மென்னதே மன்னர்
சினவேறு செந்தனிக்கோ னந்தி—யினவேழங்
கோமறுகிற் சீறிக் குருக்கோட்டை வென்றாடும்
பூமறுகிற் போகாப் பொழுது. (உ)

(பி - ம்) [1]விடமுமிழ் மடங்கல்.

## கட்டளைக்கலித்துறை.

பொழுதுகண் டாயதிர் கின்றது போகநம் பொய்யற்கென்றுந்
தொழுதுகொண் டேனென்று சொல்லுகண் டாய்தொல்லை நூல்வரம்பு
[1]முழுதுகண் டானந்தி மல்லையங் கானன் முதல்வனுக்குப்
பழுதுகண் டாயிதைப் போய்ப்பகர் வாய்சிறைப் பைங்குருகே. (௩)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருகுதிர்முன் பனிக்கொதுங்கிக் கூசுங் கங்குற்
குளிர்திவலை தோய்ந்தெழுந்த நறுந்தண் வாடை
யருகுபனி சிதறவர வஞ்சு வாளை
யஞ்சலஞ்ச லென்றுரைத்தா லழிவ துண்டோ
திருகுசினக் கடக்களிற்றுச் செங்கோ னந்தி
தென்னவர்கோன் றன்குறும்பிற் சென்று சூழ்ந்த
சுரிகைவினைப் பகைஞருட னுண்ட யாகத்
துயிலுணர்ந்த வல்லாண்மைத் தொண்டை வேந்தே. (௪)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொண்டை வேந்தன் சோணாடன் றென்னீ ரலங்கன் மூந்நீருங்
கொண்ட வேந்தர் கோனந்தி கொற்ற வாயின் முற்றத்தே
விண்ட வேந்தர் தந்நாடும் வீரத் திருவு மெங்கோனைக்
கண்ட வேந்தர் கொண்மின்க ளென்னுங் கன்னிக் கடுவாயே. (௫)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

கடுவா யிரட்ட வளைவிம்ம மன்னர்
கழல்சூட வங்கண் மறுகே
யடுவார் மருப்பி னயிரா வதத்தி
னடுபோர்செய் நந்தி வருமே
கொடுவார் புனைத்து நகுவார் படைக்கண்
மடவா ரிடைக்குண் மனமே
வடுவா யிருக்கு மகளேயி மூன்றின்
மணியூச லாடன் மறவே. (௬)

---

(பி-ம்) [1]முழுதுகண் டார்முனைத் தாரார்தந் தோன்றன் மூரிகுறும்பிற்
பழுதுகண் டாய்நந்தி மல்லையங் கானற் பனிக்குருகே.

## புயவகுப்பு.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

மறமத கரிதிசை நிறுவின மணிநகை யவர்மன நகுவன
விறலா சர்கண்மன நெகிழ்வன விரைமலர் களிமுலை பொருவன
திறலுடை யனதொடை புகழ்வன திகழொளி யனபுகழ் ததைவன
நறுமல ரணியணி முடியன [1]நயபர நினதிரு புயமதே. (எ)

### கலிவிருத்தம்.

புயங்களிற் பூவைமார் பொங்கு கொங்கைபி
னயங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சிசூழ்
கயங்களிற் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புகுந்தது பருவ வாடையே. (அ)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாடை நோக வீசு மால மாரன் வாளி தூவுமா
லாட லோத மார்க்கு மாலை ஞாலங் காக்க வல்லனோ
வேடு லாவு மாலை சேரி ராசன் மல்லை நந்திதோள்
கூடி ஞால லர்வ ராது கொங்கு விம்மு கோதையே. (கூ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோதை சோரிற் சோர்கொங்கை விம்மில் விம்மூ குறுமுறுவற்
சோதி வெளுக்கில் வெளுமருங்கு றுவளி னீயுந் துவள்கண்டாய்
காது நெடுவேற் படைநந்தி கண்டன் கச்சி வளநாட்டு
மாத ரிவரோ [2]டுறுகின்றாய் வாழி மற்றென் மடநெஞ்சே. (க0)

### ஷை வேறு.

நெஞ்சாகுல முற்றிங னேமெலிய
நிலவின்கதிர் நீளெரி யாய்விரியத்
துஞ்சாநய னத்தொடு சோருமிவட்
கருளாதொழி கின்றது தொண்டைகொலோ

---

(பி-ம்) [1]நயபர னுடையிரு புயமுமே என்றிருக்கலாம். [2]உறுகின்ற வாழி.

செஞ்சாலி வயற்படர் காவிரிசூழ்
திருநாடுடை நந்தி சினக்கலியின்
வெஞ்சாயன் மறைத்த தனிக்குடையான்
விடைமண்பொறி யோலை விடேல்விடுகே. (கக)

## கட்டளைக்கலித்துறை.

விடுதிர்கொல் லோவள நாடுடை வீர சற்குமுன்னின்
றிடுதிர்கொல் லோபண் டிறுக்குந் திறையெரி கானத்தும்மை
யடுதிர்கொல் லோதிற னந்தியெங் கோனவபி ராவதத்திற்
படுதிர்கொல் லோபடை மன்னீரென் னுழுங்கள் பாவனையே. (கஉ)

## வஞ்சிவிருத்தம்.

வனைவார்குழல் வேணியும் வாடைகணீர்
நனைவார் துகி லும்மிவை நாளுமிரா
வினைவார்கழ னந்திவி டேல்விடுகின்
கனைவார்முர சொத்தது காரதிர்வே. (கங)

## தரவுகொச்சகக்கலிப்பா.

அதிர்குரல மணிநெடுந்தே ரவனிநா ரணன்களிற்றின்
கதிரொளிய வெண்மருப்புக் கணவயிரஞ் செறிந்ததான்
மதுரைகொலோ வடுபுலிக்கோ னகரிகொலோ மாளிகைசாய்ந்
தெதிரெதிரே கெடநின்ற தெவ்வூர்கொ லறியோமால். (கச)

## நேரிசைவெண்பா.

ஓம மறைவாண ரொண்பொற் கழல்வேந்தர்
தாம முடிக்கணிந்த தாளிப்புற்—கோமறுகிற்
பாவடிக்கீழ்ப் பல்யானைப் பல்லவர்கோ னந்திதன்
சேவடிக்கீழ்க் காணலாஞ் சென்று. (கரு)

## கட்டளைக்கலித்துறை.

சென்றஞ்சி மேற்செங்கண் வேழஞ் சிவப்பச் சிலர்திகைப்ப
வன்றுஞ் [1]சினத்தா ரினமறுத் தார்போலு மஃதஃதே

(பி—ம்) [1]சினத்தா ரவர்மறுத்.

குன்றஞ்செய் தோணந்தி நாட்டங் குறிகுருக் கோட்டையின்மேற்
சென்றஞ்சப் பட்டதெல் லாம்படு மாற்றலர் திண்பதியே. (கசா)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா
நிதிதரு கவிகையு நிலமக ளுரிமையு மிவையிவை யுடைநந்தி
மதியிலி யரசர்நின் மலரடி பணிகிலர் வானக மாள்வாரே. (கஎ)

கலிவிருத்தம்.

ஆட்குலாங் கடற்படை யவனி நாரணன்
றேட்குலா மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாங் கண்ணினால் விளைத்த மம்மர்நோய்
மீட்கலா மடல்கையில் விரவு மாகிலே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரவாத மன்னரெலாம் விண்ணேற வெள்ளாற்று
வெகுண்டோன் றொண்டைக்
கிரவாத பரிசெல்லா மிரந்தேற்றும் பாவைமீ
ரெல்லீர் வாடை
வரவாதை யுற்றிருந்து வருந்துவார் பலரொன்றும்
வாழி வாழி
பரவாதை நந்திசெங்கோ லிதுவாகி லதுபார்க்கும்
பரிசு நன்றே. (கக)

ஷை. வேறு.

நன்றுங்கொடி தாயுயிர் கின்றதிரா
நலிகின்றது மாருத சாலமெனக்
கென்றின்னில வென்னு மிளம்பிறையு
மெரியேசொரி கின்றதி யாதுசெய்கே
வன்றிங்கில மேழு மளந்தபிரா
னடலுக்கம கோப னடங்கலர்போ
லின்றென்னுயி ரன்னவள் சொற்கையைவிட்
டெங்ஙன்றுயில் கின்றன னேழையனே. (உ0)

## வஞ்சித்துறை.

ஏழை மார்துணை, வாழி நந்திதண்
ணீழல் வெண்குடை, யூழி நிற்கவே. (உக)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிற்க மன்னவர் நிரந்த வெண்குடை
மிடைந்த நீள்கடை நெடுந்தகை
விற்கொ ணன்னுதன் மடந்தை மார்மிக
முயங்கு தோளவனி நாரணன்
நற்கொள் வார்மதிற் கச்சி நந்தி
நலங்கொ ளன்னவ னலங்கண்மே
லொற்க மென்மக ளுரைசெய் தோவுல
களிப்ப னித்திற னுரைத்திடே. (உஉ)

## இணைக்குறளாசிரியப்பா.

உரைவரம் பிகந்த வுயர்புகழ்ப் பல்லவ
னரசர் கோமா னடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவே லுயர்வு பாடினன் கொல்லோ
நெருநற் றுணியரைச் சுற்றிப்
பாடு திறப்பத் தன்னுற் பல்கடை
திரிந்த பாண னறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கல னணிந்து
விளங்கொளி யானை னிப்போ
திளங்களி யானை யெருத்தமிசை யன்னே. (உங)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்ன மடமயிலை யாளி மதயானை நந்தி வறியோர்
சொன்ன பொருணல்கு வள்ள லொருதீர தொண்டை வளநாட்
டன்ன நடையாளை யல்குல் பெரியாளை யங்கை யகல்வான்
மின்னை மெலிவானை நூலி னிடையாளை நேர்வு மயிலே. (உச)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மயில்கண்டான் மயிலுக்கே வருந்தி யாங்கே
மான்கண்டான் மானுக்கே வாடி மாதர்
குயில்கண்டாற் குயிலுக்கே குழைதி யாகிற்
கொடுஞ்சுரம்போக் கொழிநெஞ்சே கூடா மன்ன
ரெயில்கொண்டான் மல்லையங்கோ னந்தி வேந்த
னிகல்கொண்டா ரிருங்கடம்பூர் விசும்புக் கேற்றி
யயில்கொண்டான் காவிரிநாட் டன்னப் பேடை
யதிசயிக்கு நடையாரை யகல லூற்றேன். (உரு)

கலிவிருத்தம்.

நூற்க டற்புல வன்னுரை வெண்டிரை
நாற்க டற்கொரு நாயக னந்திதன்
கோற்க டைப்புரு வந்துடிக் குந்துணை
வேற்க டற்படை வேந்தர்தம் வீரமே. (உசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வீர தீரனல் விறலவிர் கஞ்சுகன் வெறியலூர்ச் செருவென்றோ
னூர்வ மாவுள நின்றவ ரன்பன்மற் றவன்பெருங் கடைநின்ற
சேர சோழருந் தென்னரும் வடபுலத் தரசருந் திறைதந்த
வீர மாமத கரியிவை பரியிவை யிரவலர் கவர்வாரே. (உஎ)

ஷை வேறு.

கவரிச் செந்நெற் காடணி சோலைக் காவிரி வளநாடன்
குமரிக் கொண்கன் கங்கை மணாளன் குரைகழல் விறனந்தி
யமரிற் றெள்ளாற் றஞ்சிய நெஞ்சத் தரசர்க டிரள்போகு
மிவ்வரிக் கானத் தேகிய வாறென் னெழினகை யிவளோடே. (உஅ)

ஊசல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓடரிக்கண் மடநல்லீ ராடாமோ வூசல்
லுத்தரிகப் பட்டாடை யாடாமோ வூசல்
லாடகப்பூண் மின்னாட வாடாமோ வூசல்
லம்மென்மலர்க் குழல்சரிய வாடாமோ வூசல்

கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்
காடவர்க்கு முன்றோன்றல் கைவேலைப் பாடிக்
[1]காஞ்சிபுர மும்பாடி யாடாமோ வூசல். (௨௯)

## கலிவிருத்தம்.

ஊசன் மறந்தாளு மொண்கழ லம்மானை
வீசன் மறந்தாலு மெல்லிய லென்பேதை
பூச லிலங்கிலைவேற் பொற்கழ னந்திநின
பாசிலை யந்தொண்டை யல்லது பாடாளே. (௩0)

## நேரிசைவெண்பா.

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியன் மாகளிற்றூர் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து. (௩௧)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலங்கொ ளலங்கல் வேனந்தி கச்சி நாட்டோ னவன்கழல்
புலங்கொ ளொளிய நல்லோர்க்கும் புகல்கின் றோர்க்கும் பொன்னா
நலங்கொண் முறுவன் முகஞ்சாய்த்து நாணு நின்று மெல்லவே
விலங்கல் வைத்த மின்னோக்கின் மேலு முண்டோ வினையேற்கே. ()

## கட்டளைக்கலித்துறை.

வினையின் சிலம்பன் பரிவு மிவடன் மெலிவுமென்பூந்
தினையும் விளைந்தது வாழி தன் மீறுதெள் ளாற்றுநள்ளார்
முனையுமன் றேக முலிந்தபி ரான்முனை யிற்பெருந்தேன்
வனையும் வடவேங் கடத்தார்தண் சாரலின் வார்புனமே. (௩௩)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புனத்து நின்ற வேங்கைமேற் புகைந்தெ ழுந்த வானையின்
சினத்தை யன்றொ ழித்தகைச் சிலைக்கை வீரர், தீரமோ
மனத்து ணின்ற வெஞ்சினம் மலைத்தல் கண்ட திர்ந்தமான்
வனத்த கன்ற திர்ந்ததோ நந்தி மல்லை யார்ப்பதே. (௩௪)

---

(பி - ம்) [1]காஞ்சி புரம்பாடி.

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்க்கின்ற கடலோத மார்க்கு மாறு
மசைகின்ற விளந்தென்ற லசையு மாறுங்
கூர்க்கின்ற விளமதியங் கூர்க்கு மாறுங்
காணலாங் குருக்கோட்டைக் குறுகா மன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலம்பப் பூண்ட வில்லோன்
பார்க்கொன்று செந்தனிக்கோற் பைந்தார் நந்தி
பல்லவர்கோன் றன்னருள்யாம் படைத்த ஞான்றே. (கடு)

## கலிவிருத்தம்.

ஞான்ற வெள்ளருவி யிருவி யெங்கள்பொற்
றோன்றல் வந்திடிற் சொல்லுமி ணெண்சுடர்
போன்ற மன்னவ னந்திதன் பூதரத்
தீன்ற வேங்கை யிருங்கணிச் சூழ்ச்சியே. (கசு)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சூழி வன்மத யானையின் பிடர்படு சுவடிவை சுவட்டின்கீழ்
வாழி யிந்நில மன்னர்வந் தனுதின மிறைஞ்சிய வடுக்கண்டோ
மாழி மன்னவ வன்னைய ராய்ச்சிய ரடுங்கயிற் றடியிட்ட
பாழி மன்னெடுந் தோள்வடுக் கண்டிலம் பல்லவ பகர்வாயே. (கஎ)

## ஷை வேறு.

பகாங்கொ ணெடுந்திவலை பனிவிசும்பிற் பறித்தெறியப்
பண்டு முந்நீர்
மகாங்கொ ணெடுங்கூல வரைதிரித்த மாலென்பர்
மன்னர் யானை
சிகாங்கள் போன்மடியத் தெள்ளாற்றுக் கண்சிவந்தான்
றென்னன் றெண்டி
நகாங்கைப் படுத்தபிரா னந்திநா பதிபணிகோ
னங்கள் கோவே. (கஅ)

## ஷ வேறு.

நங்கள்கோத் தொண்டை வேந்த னுமவேன் மன்னர்க் கெல்லாந்
தங்கள்கோ னங்க நாடன் சந்திர குலப்ர காசன்
திங்கள்போற் குடையி னீழற் செய்யகோல் செலுத்து மென்ப
ரெங்கள்கோல் வளைக ணில்லா விபரித மிருந்த வாறே. (நகூ)

## கட்டளைக்கலித்துறை.

ஆறு விறலடு போர்வன்மை யாலம் ராடியப்பாற்
பாறூர் களிற்றுயர் பல்லவர் கோனந்தி மல்லையன்றிக்
கூறு ளிவளிளங் கொங்கை யவன்வளர் தொண்டையல்லா
ஞூறு திவடிரு மேனியு நாமென்கொ ணுவதே. (சு0)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாணு தித்திரு மடவார் முன்புநி னன்பொற் கழலிணை தொழுதாரிற்
பூணு கத்தொளிர் பொலனு கச்செய்த புதுமென் றுண்டைய தருளாயே
வாணு ளைச்சுளி களியா னைப்படை வயவே லடையலர் குலகாலா
கோணுமைக்கொருகு றையுண்டோவுரைகொங்காநின்னதுசெங்கோலே. ()

## ஷ வேறு.

செங்கோல் வளைக்கை யிவளுந் துவண்டு
செறிமாமை வாட வெழிலா
ரங்கோல் வளைக்கை யிளையா ரிழப்ப
வரசாள்வ தென்ன வகையோ
தங்கோல் வளைத்த திகழ்சேரர் சோழர்
தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங்கோ னிமிர்த்த வரையுஞ் சிவந்த
விறனந்தி மேன்மொ ழிவையே. (சுஉ)

## கலிநிலைத்துறை.

மொழியார் தொண்டைப் பன்மலர் முற்றுந் தெருவந்து
விழியா ளென்றும் மேனி வெளுத்துற மெலிவாளே
பொழியா வண்கைத் தண்ணரு ணந்தித னூர்மட்டோ
வழியாந் தமரக் கடல்வட் டத்தொரு வண்கோவே. (சுங)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒருகோமக னந்தி யுறந்தையர்கோ
னுயர்நீள்வல யத்துயர் வாளைவளை
குருகோடு வயற்படர் காவிரியிற்
குலவும்புயல் கண்டு புகார்மணலிற்
பெருகோடு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது போரணி நீண்முடிமேற்
றருகோதை நினைந்தயர் வேன்மெலியத்
தழல்வீசுவ தோகுளிர் மாமதியே. (சச)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதிய மெரிசொரியு மாலையம் மாலை
மறந்தும் புலராது கங்குலெலாங் கங்குற்
கதிர்செ யணிவண்டு காந்தாரம் பாடக்
களிவண்டு புகுந்துலவுங் காலமாங் காலம்
பதியின் வளர்ந்தநறுந் தொண்டையங்கோ னந்தி
பல்லவற்கு நேராத பாவையர்தம் பாவை
விதியின் விளைவுகண் டியாமிருப்ப தல்லால்
வினைமற்று முண்டோநம் மெல்லோதி மாட்டே. (சரு)

## தரவுகொச்சகக்கலிப்பா.

மாட்டாதே யித்தனைநாண் மானந்தி வான்வரைத்தோள்
பாட்டாதே மல்லையர்கோன் பரியானைப் பருச்சுவடு
காட்டாதே கைதைப் பொழிலுலவுங் காவிரிநீ
ராட்டாதே வைத்தென்னை யாயிரமுஞ் செய்தீரே. (சசா)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செய்ய வாய்மிகக் கரியகண் வனமுலை
செறிந்திறு மருங்குற்கொம்
பைய சாலவு மவிரிழை யல்குல
மதுமலர்க் குழமென்குல்

வெய்ய வெப்பவி யாதகுஞ் சரநந்தி
வீரவ னிவனைப்போய்
னைய நாமிவ னகரிகை தொழுதில
நம்முயி ரளவன்றே. (சஎ)

## கட்டளைக்கலித்துறை.

அளவுகண் டாற்குடங் கைத்துணை போனு மாசர்புகும்
வளவுகண் டானந்தி மானே தயன்வையங் தன்னின்மகிழ்
தளவுகண் டாலன்ன வெண்ணகை யாற்றமி யேனதுள்ளங்
களவுகண் டாமுகத் துக்கண்க ளாய கயற்குலமே. (சஅ)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குலமரபு மொவ்வாது பயின்று வந்த
குடித்தொழிலுங் கொள்படையின் குறையுங் கொற்றச்
சிலவளவுஞ் சிந்திபாத் தெவ்வர் தேயத்
தெள்ளாற்றிற் செருவென்ற செங்கோ னந்தி
புலவரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே
பூவலயந் தனிற்கரியாய் நின்ற மன்னா
சொலவரிய திருநாம முனக்கே யல்லாற்
சொல்லொருவர்க் கிசையுமோ தொண்டைக் கோவே. (சகூ)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோவே மாலை மாலையர்க்கோ கோவே வேண்டு நிலவோகண்
கோவே மாலை மாலையது கொண்டார் குறுகு மாறறியேன்
கோவே மாலை நீண்முடியார் கொற்ற நந்தி கச்சியுளார்
கோவே மாலை யுள்ளுமெங்கள் கோவே கம்ப ரானரே. (ருo)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆகிடுக மாமை யணிகெடுக மேனி யலரிடுக வாரு மயலோர்
போகிடுக சங்கு புறகிடுக சேரி பொருபுணரி சங்கு வளைமென்
னுகிடறு கானல் வளமயிலை யாளி நயபானு மெங்க ளளவே
யேகொடியனுகவிவைபியையும்வஞ்சியினியுலகில்வாழ்வதுளதோ. ()

நேரிசைவெண்பா.

உளமே கொடிமருங் குண்டில்லை யென்னி
விளமுலைக ளெவ்வா றிருக்கும்—கிளரொளிய
தெண்ணிலவேற் கண்ணினு டெள்ளாற்றில் வென்றகோன்
றன்மயிலை யன்று டனக்கு. (ருஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தனக்குரிய வென்கொங்கை தான்பயந்த மழகளிற்றுக்
காக்கித் தன்பா
லெனக்குரிய வரைமார்ப மெங்கையர்க்கே யாக்கினு
னிகல்வேன் மன்னர்
சினக்கரியும் பாய்மாவுந் தெள்ளாற்றிற் சிந்துவித்த
செங்கோ னந்தி
மனக்கினியா னவனிட்ட வழக்கன்றே வழக்கிந்த
வையத் தார்க்கே. (ருங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தார்வட் டக்கிளி மருவுஞ் சொற்பகர்
தளரிடை தையல் வஞ்சிக்கின்
றேர்வட் டத்தனி மதிவெள் ளிக்குடை
கொடிதென் றுலது பழுதன்றே
போர்வட் டச்சிலை யுடைவாள் பற்றிய
பொருகடன் மல்லைப் புரவலனே
பூர்வட் டத்தனி மதயா னைப்படை
யுடையாய் பல்லவ ரடலேறே. (ருச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

அடலேறு வலத்துயர் வைத்தபிரா
னடலுக்ரம கோப னடங்கலர்தா
மடலேறிட வாகை புனைந்தபிரான்
வடவேங்கட நாடுடை மன்னர்பிரான்

பெடையேறு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது போரு ணீண்முடிமேன்
மிடலேறிய கோதை நினைந்தயர்வாண்
மெலியத்தழல் வீசுமி மாமதியே. (ருரு)

## காலம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மலர்ச்சூழ லமர்ந்தினிய வண்டார்க்குங் காலம்
வரிக்குயில்கண் மாவிளிளந் தளிர்கோதுங் காலம்
சிலர்க்கெல்லாஞ் செழுந்தென்ற லமுதளிக்குங் காலந்
தீவினையேற் கத்தென்ற றீவீசுங் காலம்
பலர்க்கெல்லாங் கோனந்தி பன்மாடக் கச்சிப்
பணிக்கண்ணார் பருமுத்தம் பார்த்தாடுங் கால
மலர்க்கெல்லா மைங்கணைவே ளலர்தூற்றுங் கால
மகன்றுபோ னவர்நம்மை யயர்த்துவிட்ட காலம். (ருசு)

### கலிவிருத்தம்.

காலவினை வாணர்பயில் காவிரிந ளடா
ஞாலமொரு கோவினி னடாவுபுகழ் நந்தி
நீலமயில் கோதையிவ ளின்னருள்பெ றுளேற்
கோலவளை கோடவிது மன்னர்புக ழன்றே. (ருஎ)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரவல னந்தி யெங்கள் பொன்னிநன் னாட்டு மன்னன்
வாமயில் போற்று சாயல் வாணுதற் சேடி காணுங்
குரவலர் பொழிலிற் கோலக் கோட்டிடை யில்லை யாகி
விரவலர் மலர்க ளெங்கு மில்லையோ நல்கு வேனே. (ருஅ)

### ஷை வேறு.

நல்கு நந்தியிந் நானிலங் காவலன்
மாரவே ளனிர்முத்து
மல்கு வெண்குடைப் பல்லவர் கோளரி
மல்லலங் கின்டோண்மேன்

மெல்கு தொண்டையுந் தந்தருள் கிலன்விடை
மணியொடும் விடியாத
வல்லி னோடும்வெண் டிங்களி னொடுமுள
னுய்வகை யறியேனே. (௫௯)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறம்பெருகுந் தனிச்செங்கோன் மாயன் றொண்டை
யங்கனிபோற் சிவந்து திரு முகத்துப் பூத்து
மறிந்துளதே பவளவாய் மருங்கி லாடும்
வல்லியிடை மணிமுறுவன் முத்துச் சால
நெறிந்துளதே கருங்குழலங் குவளை கண்க
ணெடியவேய் தொடியதோ ணேர்ந்து வெம்மை
செறிந்துளவே முலைசிலையே புருவ மாகி
யவர்நம்மைச் சிந்தைநோய் திருத்தி னாரே. (௬0)

## இணைக்குறளாசிரியப்பா.

திருவின் செம்மையு நிலமக ளுரிமையும்
பொதுவின்றி யாண்ட பொலம்பூட் பல்லவ
தோடுணை யாக மாவெள் ளாற்று
மேவலர்க் கடந்த வண்ணா னந்திநின்
றிருவரு நெடுங்கண் சிவக்கு மாகிற்
செருநர் சேரும் பதிசிவக் கும்மே
நிறங்கிளர் புருவந் துடிக்கி னின்கழ
லிறைஞ்சா மன்னர்க் கிடந்துடிக் கும்மே
மையில் வாளுறை கழிக்கு மாகி
னடங்கார் பெண்டிர்
பூண்முலை முத்தப் பூண்கழிக் கும்மே
கடுவாய் போல்வளை யதிர நின்னொடு
மருவா மன்னர் மனந்துடிக் கும்மே
மாமத யானை பண்ணி
னாதிர மன்னுநின் னெதிர்மலர் நோர்க்கே. (௬௧)

### நேரிசைவெண்பா.

ஓராதே யென்மகளைச் சொன்னீரே தொண்டைமேற்
பேராசை வைக்கும் பிராயமோ—நேராதா
ராள்வலியாற் கொண்ட வகன்ஞால மத்தனையுந்
தோள்வலியாற் கொண்ட துயக்கு. (௬௨)

### கட்டளைக்கலித்துறை.

துயக்குவித் தான்றுயில் வாங்குவித் தான்றுயில் வித்திவளை
வயக்குவித் தானுள்ளம் வஞ்சனை யான்மலர்க் காவகத்து
முயக்குவித் தான்றுகில் வாங்குவித் தான்முன நின்றிவளை
மயக்குவித் தானந்தி மானோ தயனென்று வட்டிப்பனே. (௬௩)

### சம்பிரதம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வட்டன்றே நீரிதனை மிகவுங் காண்மின்
மற்றைக்கை கொட்டினேன் மாவின் வித்தொன்
றிட்டன்றே பழம்பழுப்பித் துண்ணக் காண்மி
னிவையல்ல சம்பிரத மிகலிற் றெள்ளாற்
றட்டன்றே பொன்றும்வகை முனிந்த நந்தி
யவனிநா ராயணன்பா ராளுங்கோமான்
குட்டன்றே மழைநீரைக் குடங்கை கொண்டு
குரைகடலைக் குடிக்கின்றேன் குடிக்கின் றேனே. (௬௪)

### கட்டளைக்கலித்துறை.

குடக்குடை வேந்தன்றென் னாடுடை மன்னன் குணக்கினொடு
வடக்குடை யானந்தி மானோ தயனிந்த வையமெல்லாம்
படக்குடை யேந்திய பல்லவன் றன்னொடும் பாரறியத்
தொடக்குடை யாரையல் லாற்சுடு மோவிச் சுடர்ப்பிறையே. (௬௫)

### கலிவிருத்தம்.

பிறைதவழ் செஞ்சடைப் பிறங்க னாரண
னறைகழன் முடித்தவ னவனி நாரண
னறைகெழு தொண்டையோன் றொண்டை கண்டபி
னிறைகெழு சங்குயி ரிவளுக் கீந்ததே. (

ஷ வேறு.

ஈகின்றது புனமுந்தினை யாமும்பதி புகுநா
ளாகின்றது பருவம்மினி யாகும்வகை யறியேன்
வாழ்கின்றதோர் புகழ்நந்திதன் வடவேங்கட மலைவாய்த்
தேய்கின்றதொ ருருவத்தொடு திரிவாரது திறமே. (சுஎ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

திறைவிடுமி னன்றி மதில்விடுமி னுங்கள்
செருவொழிய வெங்கண் முரச
மறைவிடுமி னிந்த வவனிதனி லெங்கு
மவனுடைய தொண்டை யரசே
நிறைவிடுமி னந்தி கழல்புகுமி னுங்க
ணெடுமுடிகள் வந்து நிகழத்
துறைவிடுமி னன்றி யுறைபதிய கன்று
தொழுமினல துய்ந்த லரிதே. (சுஅ)

கலிவிருத்தம்.

அரிபயி னெடுநாட்டத் தஞ்சன முழுதாட்டிப்
புரிகுழன் மடமானைப் போதா விட்டாரா
னாபதி யெனுநந்தி நன்[1]மயி லாபுரியி
லுருவுடை யிவடாயர்க் குலகொடு பகையுண்டோ. (சுகூ)

மதங்கியார்.

தரவுகொச்சகக்கலிப்பா.

பகையின்றிப் பார்காக்கும் பல்லவர்கோன் செங்கோலி
னகையும்வாண் மையும்பாடி நன்றாடு மதங்கிக்குத்
தகையுநுண் ணிடையதிரத் தனபார மவற்றோடு
மிகையொடுங்கா முன்னிக்கூத் தினைவிலக்க வேண்டாவோ. (எ0)

கலிநிலைத்துறை.

வேண்டா ரெண்ணும் வேந்தர் பிராற்கே மெய்யன்பு
பூண்டா ணங்கா யன்றிவ ளென்றாற் பொல்லாதோ

---

(பி-ம்) [1]மயிலாப்பூரில்.

மூண்டார் தெள்ளாற் றுள்ளே மூழ்க முனிவாறி
மீண்டா னந்திக் கென்மக டோற்கும் வெண்சங்கே. (எக)

## வெண்டுறை.

வெண்சங் குறங்கும் வியன்மாதர் முற்றத்து விடியவேவான்
வண்சங் கொலிப்ப மடவார்கள் விளையாடு மல்லைவேந்தன்
றண்செங்கோ னந்தி தனிக்குடைக்கீழ் வாழாரிற்
கண்சிம் புளியாநோ யாமோ கடவோமே. (எஉ)

## கலிவிருத்தம்.

கடற்கூதிர் மொய்த்த கழிப்பெண்ணை நாரை
மடற்கூறு தோறு மலிமல்லை கங்கு
லடற்கூடு சாவே யமையாத வர்வை
திடற்கூறு வேனுக் கேதாவி யுண்டோ. (எங)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உண்டிரையிற் செங்கழுநீ ரிலஞ்சி மாடே
யொண்பொழிலிற் சண்பகத்தார் தடவி யோடித்
தண்டலையிற் பூங்கமுகம் பாளை தாவித்
தமிழ்த்தென்றல் புகுந்துலவுந் தண்சோ ணாடா
விண்டொடுதிண் கிரியளவும் வீரஞ் செல்லும்
விடேல்விடுகு நீகடவும் வீதி தோறுந்
திண்டறுகண் மாத்தொழுத பாவை மார்க்குச்
செங்கோல னல்லையோ நீசெப் பட்டே. (எச)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பட்ட வேந்தர்தம் பூணொடும் பாவைமார் நாணொடுந் தெள்ளாற்றில்
வட்ட வெஞ்சிலை நாணிடக் கழித்தவன் மல்லையின் மயிலன்னாள்
விட்ட கூந்தலும் விழியுநன் முறுவலு நுதன்மிசை யிடுகோல
மிட்ட பொட்டினொ டிளமுலைப் போகமு மெழுதவு மாகாதே. (எரு)

## வேறு.

ஆகாது போக மயில்விளைத் தகன்ற லவன்கை
போகாத சங்கு மருளாள ரென்ற போதுவண்டோ
.... .... .... ....
.... .... .... .... (எ

## மறம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்பொன்று வில்லொடித னாறுத னன்கிழவ னசைந்தே னென்றே
வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார் மன்னர் தூதா
செம்பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றி னந்திபதஞ் சேரா ரானைக்
கொம்பன்றே நங்குடிலிற் குறுங்காலு நெடுவளையுங் குனிந்து பாரே. ()

### ஷை வேறு.

பாவையர் பரிந்து தாங்கும் பனிமலர் செறிந்த செந்திற்
கோவையேய் நந்தி காக்குங் குளிர்பொழிற் கச்சி யன்னாள்
பூவையும் பந்துந் தந்து புல்லினா ளென்னை யென்னே
மாவியல் கானம் போந்த தறிகிலேன் மதியி லேனே. (எஅ)

### ஷை

*நீண்டதாங் கங்கு லெங்கு நிறைந்ததாம் வாடை பொங்கி
மூண்டதா மதியி னோடே மூயங்குதார் வழங்கு தெள்ளாற்
றீண்டினார் பரியுந் தேரு மிருகைவென் றொருகை வேழந்
தூண்டினா னந்தி யிந்தத் தொண்டைநா டுடைய கோவே. (எகூ)

### வெண்டுறை.

கோலக்கொடியன்னவர்நீள்செறுவிற்குறுதேன்வழிகொண்டலருங்குவளை
காலைப்பொழுதின்னெழுகன்னியர்தங்கண்ணின்படிகாட்டிடுகச்சியின்வாய்
மாலத்தெள் ளாறெறிந்த மானோ தயன்குடைக்கீழ்
ஞாலத்தோ டொத்ததே நான்பெற்ற நறுங்கொம்பே. (அ0)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொம்புயர் வாமை நாக மெதிர்வந்த நந்தி குலவீர ராக மழியத்
தம்பிய ரெண்ண மெல்லாம் பழுதாக வென்ற தலைமான வீர துவசன்
செம்பியர் தென்னர் சேர ரெதிர்வந்து மாய செருவென்ற பாரி முடிமேல்
வம்புயர்தொண்டைகாணுமடமாதர்தங்கைவளைகொண்டதென்னவலமே.

### குறள்வெண்செந்துறை.

வலம்வரு திகிரியு மிடம்வரு பணிலமு மழைதவழ் கொடிபோலக்
குலமயில் பாவையு மெறிகடல் வடிவமு மிவையிவை கொண்டாயே. ()

---

*மேற்பாட்டிற்கும் இதற்கும் அந்தாதித்தொடை இல்லை.

### கலிவிருத்தம்.

கொண்ட லூறும்பொழில் வண்டின மாமணி
வண்ட லிடுங்கடன் மல்லைகா வலனே
பண்டை மராமர மெய்தபல் லவனே
தொண்டை யொற்றுவ ளிவடோள் வளையே. (அரு)

### நேரிசைவெண்பா.

தோளான் மெலியாமே யாழ்கடலாற் சோராமே
வாளா பெறலாமே வாயற்றீர்—கேளாதார்
குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை யத்தனையு
மஞ்சாங்க ளார்த்தா னருள். (அச)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருளான தெங்ஙனையர்க்கே யன்றுயென் றியம்பிடுமெங் கன்னிசெஞ்சொற்
றெருளாமே னல்குநந்தி தெள்ளாற்றிற் பொருதபோர் தன்னி லந்நா
ளிருளான மதகரியும் பாய்மாவு மிரதமுங்கொண் டெதிர்ந்தார் தம்முன்
மருளாமே நன்கடம்பூர் வானேற வளைந்துவென்ற மன்ன ரேறே. (அரு)

### ஷ வேறு.

ஏறு பாய விளைவித்த தெல்லாம் வார்க்குங் குமக்கொங்கை
வீறு பாயக் கொடுக்கின்ற விடலை யார்கோ வென்கின்றீர்
மாறு பாயப் படைமன்னர் மாவுந் தேருந் தெள்ளாற்றி
லாறு பாயச் சிவந்ததோ ளிணைகா விரிநா டாள்வானே. (அசு)

### கலிவிருத்தம்.

ஆயர் வாய்க்குழற் காற்றுறு கின்றில
ளேயு மாங்குயிற் கென்னைகொ லாவதே
தேய மார்புகழ்த் தேசபண் டாரிதன்
பாயன் மேல்வரல் பார்த்து நின் றுளுக்கே. (அஎ)

### கட்டளைக்கலித்துறை.

துளவுகண் டாய்பெறு கின்றிலஞ் சென்றினிச் சொல்லவல்ல
வளவுகண் டாய்வந்த தாதிகண் டாயடல் வேழமுண்ட
விளவுகண் டாலன்ன மேனிகண் டாய்விறன் மாரன்செய்த
களவுகண் டாய்நந்தி மல்லைபங் கானற் கழிக்கம்புளே. (அஅ)

குறிப்பு:—மற்றும் இரண்டுபாட்டுப் புலப்படவில்லை.

# சிலபிரதிகளில் அதிகமாகக்காணப்பட்ட பாட்டுக்கள்.

### நேரிசைவெண்பா.

என்னையா னேபுகழ்ந்தே னென்னுதே யெப்புவிக்கு
மன்னர்கோ னந்தி வரதுங்கன்—பொன்முடியின்
மேல்வருடுந் தொண்டை விரைநாறு மின்னமுமென்
கால்வருடுஞ் சேடியர்தங் கை. (க)

கைக்குடமி ரண்டுங் கனகரும் பக்குடமும்
முக்குடமுங் கொண்டான் முறியாதே—மிக்கபுகழ்
வேய்க்காற்றி னல்விளங்கும் வீரநந்தி மாகிரியி
லீக்காற்றுக் காற்ற விடை. (உ.)

இந்தப் புவியி லிரவலருண் டென்பதெல்லா
மந்தக் குமுதமே யல்லவோ—நந்தி
தடங்கைப்பூ பாலன்மேற் றண்கோவை பாடி
யடங்கப்பூ பாலரா னர். (ந.)

### கட்டளைக்கலித்துறை.

அடிவிளக் குந்துகி லாடை விளக்கு மாசர்பந்திப்
பிடிவிளக் கும்மெங்க ளூரார் விளக்கும் பெரும்புகழாற்
படிவிளக் குந்நந்தி யெங்கோன் பெரும்படை வீட்டுக்கெல்லாம்
விடிவிளக் கும்மிது வேநாங்கள் பூண்பதும் வெண்முத்தமே. (ச)

### நேரிசைவெண்பா.

ஏம வரைசலிக்கு மேழாழி யுங்கலங்குங்
காம வயிரி களங்கறுக்குஞ்—சோமன்
வருநந்தி யானத்து மாறுரை விட்டுப்
[1]பொருநந்தி போந்த பொழுது. (ரு)

### கட்டளைக்கலித்துறை.

ஊரு மரவமுந் தாமரைக் காடு முயர்வனமுந்
தேரு முடைத்தென்பர் [2]சீறுத நாணந்தி சீறியபின்
பூரு மரவமுந் தாமரைக் காடு முயர்வனமுந்
தேரு முடைத்தென்ப ரேதெவ்வர் வாழுஞ் செழும்பதியே. (சு)

(பி-ம்.) [1]'பொருநந்தி நீபோன போது', பொருநந்தி நீபோந்த போது.
[2]சீறுத முன்னந்தி.

### கட்டளைக்கலித்துறை.

திருத்தேர் புகழ்நந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்முந்து மாகின் மகுடரத்னப்
பரித்தேரும் பாகுமங் கென்பட்ட வோவென்று பங்கயக்கை
நெரித்தே வயிற்றில்வைத் தேநிற்ப ளேவஞ்சி நெஞ்சுலர்ந்தே. (எ)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவனை முழுது மறவாத சிந்தையான்
செயமு னுறவு தவிராத நந்தியூர்(க்)
குவளை மலரின் மதுவாரும் வண்டுகாள்
குமிழி சுழியில் விளையாடு தும்பியே
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
யவரு மவதி சொனநாளும் வந்ததே
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவ ருறவு கதையாய் முடிந்ததே. (அ)

### நேரிசைவெண்பா.

தொடர்ந்து பலரிரந்த தொண்டையந்தார் நாங்க
ணடந்த வழிகடொறு நாறும்—படர்ந்த
மலைகடாம் பட்டனைய மால்யானை நந்தி
முலைகடாம் பட்டசையா முன். (கூ)

### தரவுகொச்சகக்கலிப்பா.

நம்மாவி நங்கொழுநர் பாலதா நங்கொழுநர்
தம்மாவி தம்பால தாகுந் தகைமையினுற்
செம்மாலை நந்தி சிறுகுடிநாட் டன்னமே
தம்மாவி தாமுடைய ரல்லரே சாகாமே. (கo)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியுங் கால
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்குங் காலங்
கொங்கைகளுங் கொன்றைகளும் பொன்சொரியுங் காலங்
கோகனக நகைமுல்லை முகைநகைக்குங் காலஞ்
செங்கைமுகி லனையகொடைச் செம்பொன்பெய் [1]யேகத்
தியாகியெனு நந்தியருள் [2]சேராத கால
மங்குயிரு மிங்குடலு மானமழைக் கால
மவரொருவர் நாமொருவ ரானகொடுங் காலம். (கக)

---

(பி-ம்.) [1]மேகத், [2]சேராதார் போல,

அன்னையருந் தோழியரு மடர்ந்துபொருங் கால
மானிபோ யாடிவரை யாவணியின் காலம்
புன்னைகளும் பிச்சிகளுந் தங்களின்ம கிழ்ந்து
பொற்பவள வாய்திறந்து பூச்சொரியுங் காலஞ்
செங்நெல்வயற் குருகினஞ்சூழ் கச்சிவள நாடன்
றியாகியெனு நந்திதடந் தோள்சேராக் கால
மென்னையவ ரறமறந்து போனாரோ தோழி
யிளந்தலைகண் டேநிலவு பிளந்தெரியுங் காலம். (கஉ)

## நேரிசைவெண்பா.

ஈட்டு புகழ்நந்தி பாணநீ யெங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவுங்—காட்டிலழும்
பேயென்று ளன்னை பிறர்நரியென் றூர்தோழி
நாயென்று ணீயென்றே னான். (கங)

## கட்டளைக்கலித்துறை.

கோட்டை யிடித்தகழ் குன்றாக்கிக் குன்றக ழாக்கித்தெவ்வர்
நாட்டை மிதிக்குங் கடாக்களிற் றானந்தி நாட்டினிற்பொற்
றோட்டை மிதித்தந்தத் தோட்டுடே [1]பாய்ந்து சுருளளகக்
காட்டை மிதிக்குங் கயற்கண்ணி யோசுரங் கால்வைப்பதே. (கச)

## நேரிசைவெண்பா.

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றாரோ தடவினார்—பைந்தமிழை
யாய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் [2]மெய். (கரு)

## கட்டளைக்கலித்துறை.

சதிராக நந்தி பரன்றனைக் கூடிய தையலரை
யெதிராக்கி யென்னை யிளந்தலை யாக்கியென் னங்கமெல்லா
மதிராக்கித் தூசு மழுக்காக்கி யங்கமங் காடிக்கிட்ட
புதராக்கி யென்னையும் பற்றும லாக்கிய பாலகனே. (கசு)

## நேரிசைவெண்பா.

ஓடுகிற மேகங்கா ளோடாத தேரில்வெறுங்
கூடு வருகுதென்று கூறுங்கோ—ணாடியே
நந்திச்சீ ராமனுடை நன்னகரி னன்னுதலைச்
சந்திச்சீ ராமாகிற் றான். (கஎ)

---

(பிரதி) [1]சென்று. [2]மேல்.

### தரவுகொச்சகக்கலிப்பா.

மண்ணெலா மூய்ய மழைபோல் வழங்குகரத்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டிற்
பெண்ணிலா வூரிற் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே. (கஅ)

### கட்டளைக்கலித்துறை.

காவிய னந்த மெடுத்தான் மதன்கைக் கரும்பெடுத்தான்
மேவிய னந்த வனம்புகுந் தானினி வேட்டஞ்செய்வா
னாவிய னந்தமுண் டோவுயிர் தான்விட் டகலுமுன்னே
தேவிய னந்திக்கிங் காரோடி விண்ணப்பஞ் செய்குவரே. (கக)

### நேரிசைவெண்பா.

செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தைய லுறவு தவிர்ந்தோமே—வைய
மணக்கும் பெரும்புகழான் மானபர னந்தி
யிணக்கம் பிறந்தநா ளின்று. (உ0)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*வானுறைமதியிற்புக்கதுன்றட்பமறிகடல்புக்கதுன்பெருமை
கானுறைபுலியிற்புக்கதுன்சீற்றங்கற்பகம்புக்கதுன்கொடைகள்
தேனுறைமலராளரியிடம்புகுந்தாள்செந்தழல்புக்கதுன்மேனி
யானுமென்கலியுமெவ்விடம்புகுவோநந்தியேயெந்தைபிரானே. (உக)

### கட்டளைக்கலித்துறை.

வாரூரு மென்முலை வார்த்தைகண் டேரு மதிமுகத்தில்
வேரூரு மேனி வியன்றளி ரூரும் விசயனுக்குத்
தேரூரு மானந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பிற்
காரூர் குழலிக்குக் காதள வூருங் கடைக்கண்களே. (உஉ)

---

* இப்பாட்டுச் சிலபிரதிகளில்,—

வானுறுமதியையடைந்ததுன்வதனமறிகடல்புகுந்ததுன்கீர்த்தி
கானுறுபுலியையடைந்ததுன்வீரங்கற்பகமடைந்ததுன்கரங்க
டேனுறுமலராளரியிடம்புகுந்தாள்செந்தழலடைந்ததுன்றேக
நானுமென்கலியுமெவ்விடம்புகுவேநந்தியேநந்தயாபரனே,

எனப் பாடபேதங்களுடன் காணப்படுகிறது.

# அரும்பதவுரையும் துறைக்குறிப்பு முதலியனவும்.

[எண்—பாட்டெண்.]

## பாயிரம்.

2. தைத்த—தைக்கப்பட்ட. புரசை—யானைக்கழுத்திடு கயிறு. தொழ—நாம் (கவி) தொழுதலால்.

4. தரு வாணி ஆண்மை இறை சாரும்—தருகின்ற வாக்கும் ஆண்மையும் தலைமையும் உண்டாகும். உரு ஆணி ஐங்கரன்—ஆணிப்பொன்னிறமான வடிவமுடைய விநாயகன். ஆறுமுகத்தோன் என்றவிடத்து இரண்டனுருபு தொக்கது. பங்கில் வைப்பார்க்கு—(அந்நால்வரையும்) தம்பக்கலிலிருப்பவராகக்கொண்டு தியானிப்பவர்க்கு. பவம்—பிறப்பு.

## நூல்.

1. வீ சிகை—பெருமைபொருந்திய சிகை=சடை. விராய்—விரவி=கலந்து. வாசிகை—மாலை. அசைத்தல்—கட்டல். ஏகாசம்—உத்தரியம். விடை—விடைக்கொடி; இது பல்லவர்க்குரியது.

2. தலைவிகூற்று. நந்தியும், குருக்கோட்டைவென்றும் இனவேழமும் பூமறுகிற்போகாப்பொழுது எனதேகலை; வளையு மென்னதே எனக் கூட்டி முடிக்க.

3. தலைவிகூற்று; நாரைவிடுதூது. பொழுதுகண்டு ஆய் அதிர்கின்றது போக எனப் பிரிக்க. ஆய்—தாய். அதிர்தல்-உரத்துச்சொல்லியடக்குதல். போக—ஒழியும்படி. குறித்தகாலத்து வாராமையாற் 'பொய்யன்' என்றாள்.

4. தோழிகூற்று. குறும்பு—அரண். சுரிகை—வாள்.

5. தொல் நீர் அலங்கல் முந்நீர்—பழையநீர்மையையும் அசைதலையுமுடைய கடல். கடுவாய்—ஒரு வாத்தியவிசேடம்.

6. செவிலிகூற்று. கழல்சூட—வணங்க, வார்கொடுபுனைந்துநகுவார் படைக்கண்மடவாரிடைக்குள்—வார்கொண்டு புனைந்துவிளங்குகின்ற வாள் போலுங் கண்ணையுடைய பெண்கள்மத்தியில். புனைத்து—விகாரம். மனமே வடுவாயிருக்கும்—மனம் மாசுபட்டிருக்கிற. ஏ—அசை. மனம் மாசுபடுதலாவது முன்னும் இவனைக் கண்டு காமநோய்கொண்டமை.

7. தொடை—(கவிஞர்) செய்யுள். அணிமுடி—ஆபரணங்களின் பூட்டு.

9. தலைவியிரங்கல். ஓதம்—கடல்.

10. தலைவன் நெஞ்சொடு கிளத்தல்.

11. தோழிகூற்று. தொண்டை—தொண்டைமாலை. இந்நூற்றலைவன் இடபமுத்திரையுடையானென்று இதனால் தெரிகின்றது. விடேல் விடுகு—இவன்பெயர்களிலொன்று.

12. ஒருவீரன் தன் அரசனது ஆண்மையை யெடுத்துக்கூறியது.

13. தலைமகளைப் பாங்கி யாற்றுவித்தல்.

14. அவனிநாரணன்—நந்தியின்பெயர். வயிரம்—தந்தப்பூண் (கிம்புரி).

15. தாளிப்புல்—ஒருவகைப்புல்; பாரதவெண்பா 161—ஆம்பாட்டுப் பார்க்க.

17. மணி—முத்து. பணை—மூங்கில். மேகத்திலிருந்தும் மூங்கிலிலிருந்தும் முத்துப் பிறக்கும். பகரா—(பண்டமாற்றாக) விற்று. தொகு என்னும் முதனிலையைத் தொகுத்து என வினையெச்சமாக்குக.

18. இரந்து குறைபெறாதுவருந்தியதலைமகன் மடலேபொருளென மதித்தல்.

19. தோழி தலைவனை யியற்பழித்துரைத்தல். பாவைமீரென்பதனைப் பாவைமாரெனத் திருத்துக. எல் ஈர் வாடை—இரவில் வருத்துகின்ற வாடை.

20. தலைவன் பிரிந்துழியிரங்கல். நிலமேழுமளந்தபிரான்-திருமால்; அரசரைத் திருமாலாகக்கூறுதல் மரபு. பின்னு மிவ்வாறே 37, 38, 60, 80, 81, 83 ஆம் செய்யுட்களிலுங் கூறப்பட்டிருத்தல் காண்க. உக்ரமகோபன் தலைவன்பெயர்.

22. விரந்த—கலந்த. ஒற்கம்—தளர்ச்சி.

23. பரடு—கணைக்காற்கீழுள்ளதோர் உறுப்பு.

24. இயலிடங்கூறல். அன்னமடம்—அன்னசத்திரம். கையகல்—இடமகன்ற.

25. தலைவன் நெஞ்சொடுகிளத்தல். நூற்றேன்—சொன்னேன்.

28. செவிலியிரங்கல். கவரிச்செந்நெல்-ஒருவகைநெல்; கவரிபோலுங் கதிரையுடையநெல் எனினும் அமையும். இவ் அரிக்கானத்து எனப் பிரிக்க. அரி-பருக்கைக்கல்.

29. குவலயமார்த்தாண்டன் - நந்திக்கு ஒருபெயர். காடவற்கு என்றிருப்பதைக் காடவர்க்கு எனத் திருத்துக. காடவர்-பல்லவர்.

30. செவிலிகூற்று.

31. பிச்சம்-ஒருவகைக்குடை. படைஆறு-மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்பன. கடையாறு-வாயில்வழியே.

32. தலைவன் (தலைவியினது) நலம்பாராட்டல். புலம்-அறிவு. விலங்கல்-மலை.

33. தோழி தலைவன் சிறைப்புறத்தானாக (த்தலைவியை) இற்செறிப்பறிவுறுத்தல். தன்மீறு-தன்னைமீறிய. விளைந்தது என்பதனைப் பரிவு, மெலிவு, தினை என்பவற்றோடு தனித்தனி கூட்டுக. மூனை-உச்சி.

34. தோழி செவிலிக் கறத்தொடுநிற்றல். வேங்கைமேல்-வேங்கை மரத்தினடியில். தீரம்-தீரச்செயல்கள். நின்றது என்னும் வினைமுற்று ஈறுகெட்டது.

35. தலைவிகூற்று. கூர்த்தல்-மிகுதல்.

36. தோழிகூற்று. தலைவன்சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல். இருவி-தினைத்தாள். ஈன்றவேங்கையிருங்கணி-பூத்தவேங்கையாகிய பெரிய சோதிடன். இப்பாட்டின் முதலடி ஓசை நன்கமையவில்லை.

38. பகரம்-பிரகாசம். கூலம்-நீர்நிலை.

39. தலைவிகூற்று. தலைவனை 'அங்கநாடன்' என்றமையின், அங்கநாடும் இவனாட்சிக் குட்பட்டிருந்ததென்பது பெறப்படுகிறது. மேல் 65ம்-பாட்டில் 'வடக்குடையான்' என்பதுங் காண்க.

40. பாங்கி ஐயந்தீர்தல். நாமுது என்பதனை மத்திமதீபமாக்கிப் பொருள்கொள்க.

41. தோழிகூற்று. நாணுது-(எங்கள் தலைவி) நாணமடையாவண்ணம். தொழுதாரின்-தொழுதாருக்கு அருளல்போல.

42. தோழிகூற்று. மாமை-அழகு. தமிழ்மன்னர்-பாண்டியர்.

43. கார்கண்டு தலைவன் பாகனொடுகிளத்தல். தமரம்-ஒலி. கோ-மேகம்.

44. தலைவியிரங்கல். (சந்திரோபாலம்பனம்.) காவிரியிற் குலவும்புயல் கண்டு—காவிரியிற் படிந்துவிளங்கும் காரினைக் கண்டு; என்றது கார்காலங் குறித்தபடி.

45. தோழிகூற்று. மாலை - முன்னது மாலைக்காலம்; பின்னது மயக்கம். 'மாலையாம் மாலை' என்றிருப்பின் நலம். களிவண்டு—மன்மத பாணம். பல்லவற்கு நேர்தல்—பல்லவனருளுக்குப் பாத்திரமாதல். பாவை--பாவைபோன்றவளது.

46. தலைவிகூற்று. பாடாதே என்பது பாட்டாதே என விகாரமாயிற்று.

47. பாங்கன் தலைவனை வியத்தல். (பின்னிரண்டடிக்குப் பொருட் பொருத்தமில்லை.)

48. இயவிடங்கூறல். வளவு-வீடு. கண்டான்-செய்தவன்.

49. புலவரசு-வேற்றுப்புலத்தரசர். கரியாய்-சான்றாய். திருநாமம் - சிறந்தபுகழ்; நந்தியென்னும்பெயருமாம்.

50. இதன்பொருள் நன்குபுலப்படவில்லை.

51. தோழிகூற்று. மாமை-ஈண்டுப் பசலைநிறம். அலர்-பழிச்சொல். புறகிடல்-இங்குப் புறங்கூறல் என்று பொருள்படும் அம்பலாம்.

52. தலைவன் தலைவியை வியத்தல்.

53. இறைமகன்புறத்தொழுக் கிறைமகளுணர்த்தல்.

54. பாங்கிகூற்று.

55. பாங்கிகூற்று. அடங்கலர்தாம் மடலேறிட-பகைவர் (இவன்வீரங் கண்டு பெண்டன்மையடைந்து,) இவனையடையும்பொருட்டு மடலேற. (மடலூர்தல் பெண்களுக்குமுண்டு.) பேருணீண்முடி என்பதைப் பேரணிநீண் முடி எனத் திருத்திக்கொள்க.

56. தலைவி கூற்று.

57. தோழிகூற்று.

58. தலைவன் கையுறைபுகழ்தல். 'மன்னன்' என்பது 'மன்னும்' என்றிருப்பின் நலம்.

59. தலைவியிரங்கல்.

60. தலைவன் உற்றதுரைத்தல். நோய்திருத்தல்-வருத்தமிகுவித்தல்.

61. பதி சிவக்கும்-ஊர்கள் எரியூட்டப்படும்.

62. செவிலிகூற்று. துயக்கு ஓராதே என விற்பூட்டுப்பொருள்கோளாக்கிப் பொருள்கொள்க.

63. பாங்கி செவிலிக் கறத்தொடுநிற்றல். வட்டிப்பன் - ஆணையிட்டுச் சொல்லுவேன்.

64. குட்டம் என்பது குட்டெடன்றானது விகாரம். குட்டன்று- குட்டமாத்திரமன்று. குட்டம்-குளம்.

65. தலைவியிரங்கல். அவனோடுதொடர்புடைமையால் என்னையுஞ் சுட்ட தென்பது எஞ்சிநின்றது.

66. தோழிகூற்று. முடித்தவன்-சிரத்திற்சூடியவன். அத்தொண்டை ஈந்தது என முடிக்க. இறை-முன்கை.

67. தோழி, தலைவன்சிறைப்புறத்தானாகச் செறிப்பறிவுறுத்தல். திறம்-தன்மை. திறம் ஆகும்வகை அறியேன் எனக் கூட்டுக.

68. தொண்டையரசு - தொண்டையிராச்சியம். அரசேயென்பதை அரசு எனத் திருத்துக. அரசு என்றது ஈண் டிராச்சியம் என்னும் பொருட்டு. முரசமறைவிடுமின் - முரசறைதலை விடுங்கள். நிறை - ஆடவர்குணநான்கினு ளொன்று. உய்ந்தல்-உய்தல்; விகாரம். இப்பாட்டு 12-ம் பாட்டுப்போல்வது.

69. தலைவன் தலைவியை வியந்துரைத்தல்.

70. அவற்றோடு-அவற்றால்; தனபாரமவற்றால் நுண்ணிடை மிகை யொடுங்காமுன் எனக் கூட்டுக.

71. செவிலி நற்றாய்க் கறத்தொடுநிற்றல். என்மகள் வெண்சங்கு தோற்கும் எனக் கூட்டுக. நங்காய்-பெண்களிற் சிறந்தவளே.

72. தலைவியிரங்கல். சிம்புளியாநோய்-உறங்காநோய். கண் சிம்புளித் தல் - கண்மூடுதல்.

73. தலைவியிரங்கல். கூதிர் - வாடைக்காற்று. உசா அமையாதவர் வைதிடற்கு உறுவேனுக்கு எனப் பிரிக்க. உசா-உசாத்துணை. ஏ-அசை, உறுவேனுக்கு என்பது முதல்நீண்டது.

74. தோழிகூற்று. செப்புட்டு—சொல்லுவாயாக. சண்பகத் தார்— சண்பகப்பூ.

75. எழுதவரிதென்றல்.

77. அசைந்தேன்-தளர்ந்தேன்.

78. செவிலி, தன்னறிவின்மைகுறித்துத் தன்னை நொந்துரைத்தல். செந்திற்கோ-சுப்பிரமணியன்.

79. தோழிகூற்று. முயங்கு-சேர்வாயாக. மதியினோடு வாடைபொங்கி மூண்டதாம் எனக் கூட்டுக. தூண்டினான்-அண்மைவிளி.

80. நற்றுயிரங்கல். செறு-வயல். குறு-குற்ற=களைந்த.

81. தோழிகூற்று. கொம்பு உயர்வு ஆம் மை நாகம் எதிர்வந்த நந்தி-கசேந்திரனுக் கெதிரில்வந்த திருமாலாகிய நந்தி. மாயச்செரு என்றது மாயசெரு எனத் தொகுத்தல்விகாரம்பெற்றது.

82. இதிற் பாட்டுடைத்தலைவன் ஊர் பெயர் முதலிய ஒன்றுமின்று.

83. தோழிகூற்று. வளை-தழுவுவாய்.

84. தலைவிகூற்று. பெறலாமே என்பதில் ஏகாரம் எதிர்மறை. வாயற்றீர் என்றது தலைவனிடம் என்னியல்சொல்லி, அருள்புரியும்படி வாக்காற் கேளாதிருந்தீர் என்பதுணரநின்றது.

85. தோழிகூற்று. தெருளா-தெளிந்து. நந்தி, மன்னரேறே தெருளா மேல் நல்கு எனக் கூட்டி முடிக்க.

87. தோழிகூற்று. தேசபண்டாரி-நந்தியின்பெயர்.

88. தலைவிகூற்று. தாதி-தோழி. துளவுகண்டாய் பெறுகின்றிலம் என்றதனுல் வந்ததாதி என்பது மாலைபெருது வெறுங்கையொடுதாதிவந்தன ளென்று குறித்தவாறும். வேழம் என்றது விளங்கனிக்குண்டாகும் 'யானை' யென்னுமொருநோயினை. விளவு - ஆகுபெயராய் விளங்கனியையுணர்த்திற்று. கானல்-கடற்கரை. கம்புள்-சம்பங்கோழி.

---

## பாட்டுடைத்தலைவன் பெயர்கள்.

நந்தி, அவனிநாராயணன், மல்லைப்புரவலன், மல்லைகாவலன், மல்லை வேந்தன், மல்லையங்கானன்முதல்வன், மயிலைகாவலன், பல்லவர்கோன், பல்லவர்தோன்றல், தொண்டைவேந்தன், சோணாடன், உறந்தையர்கோன், அங்கநாடன், சந்திரகுலப்பிரகாசன், உக்ரமகோபன், குவலயமார்த்தாண்டன், தேசபண்டாரி, மாநோதயன், விடேல்விடுகு, நயபரன்.

## இந்நூலாலறியப்பட்ட ஊர்கள், நாடுகள், போர்க்களங்கள்.

மல்லை, கச்சி, மயிலை; சோணாடு, கச்சிநாடு, வடவேங்கடநாடு, அங்கநாடு; கடம்பூர், குருக்கோட்டை, தெள்ளாறு, தொண்டி, பழையாறு, வெள்ளாறு, வெறியலூர்.

---

# வசைக்குறிப்புக்கள்.

[எண்கள் பாட்டைக் குறிப்பன.]

## பாயிரம்.

2. 'திருப்பெருக' என்பது செல்வங்கெட்டுப்போகஎனப்பொருள் குறிக்கும் வசையாம். [தாலிபெருகிற்று என்பது உலகவழக்கு.]

## நூல்.

1. 'மண்டலம்' என்பது மங்கலச்சொல்லாயிருப்பினும் (மண்டு + அலம்) மண்டுகின்றசஞ்சலம் என அமங்கலப்பொருள்தந்ததுகாண்க.

'உலகுடையான் திருமுடியும்' என்பதில் திரு அழிந்துபடும் என்ற வசைப்பொருள் தோன்றுதல் காண்க.

3. 'முதல்வனுக்குப்பழுது' என்பதிற் பழுது கேடு என்றும் பொருள்படுத லறிக.

11. 'ஒழிகின்றது தொண்டை' என்பது தொண்டைமாலை யொழிந்துபோகின்றது என்றும், 'நந்திசினக்கலி' என்பது நந்தியாகிய சின்னச்சனி என்றும் பொருள்படுதல் காண்க.

17. 'நந்திமதிபிலி' என்பது—நந்தியாகிய அறிவிலி என்றும் பொருள்படுதல் காண்க.

19. 'பரவாதைநந்தி' என்பது மிகுதியானதுன்பத்தையுடைய நந்தி என்றும் பொருள்படுதல் காண்க.

49. 'கரியாய்நின்றமன்னு' என்பது அமங்கலப்பொருள்குறித் தமை காண்க.

53. 'மனக்கினியான்' என்பதற்கு மனத்திற்கினிக்கமாட்டான் என்றும் பொருளாம்.

55. 'நாடுடை' என்பது நாடு கெட்டுப்போன் என்றும் பொருள் படும்.

60. பெருகுதல்—கெடுதல்; திருப்பெருக (பாயிரம்—2) என்பது போலக் கொள்க. அறம் பெருகும் என்பது அறம் கெடும் என்றும் பொருள்படுதல் காண்க.

65. 'தென்னாடுடைமன்னன்' என்பது தென்னாடுகெட்டமன்னன் என்றும், 'வையமெல்லாம்பட' என்பது உலகமெல்லாம் அழிய என்றும் பொருள்படுதல் காண்க.

குறிப்பு:—இவையன்றி, இன்னும் ஆங்காங்குளவேற் கண்டுகொள்க.

உ

# பாட்டுமுதற்குறிப்பகராதி.

[எண் பக்க எண்.]


| | |
|---|---|
| அடலேறு | 15 |
| அதிர்குரல | 6 |
| அம்பொன்று | 21 |
| அரிபயி | 19 |
| அருளான | 22 |
| அளவுகண்டாற் | 14 |
| அறம்பெருகுங் | 17 |
| அன்னமட | 8 |
| ஆகாதுபோக | 20 |
| ஆகிடுகமாமை | 14 |
| ஆட்குலாங் | 7 |
| ஆயர்வாய்க் | 22 |
| ஆர்க்கின்ற | 11 |
| ஆரூர்விற | 12 |
| ஈகின்றது | 19 |
| உண்டிரையிற் | 20 |
| உரைவரம்பு | 8 |
| உளமேகொடி | 15 |
| ஊசன்மறங் | 10 |
| எனதேகலை | 3 |
| ஏழைமார் | 8 |
| ஏறுபாய | 22 |
| ஒருகோமக | 13 |
| ஓடரிக்கண் | 9 |
| ஓமமறை | 6 |
| ஓராதேயென் | 18 |
| கடற்கூதிர் | 20 |
| கடுவாயிரட்ட | 4 |
| கரியின்முனம் | 1 |
| கலங்கொ | 10 |
| கவரிச்செங் | 9 |
| காலவினை | 16 |
| குடக்குடை | 18 |
| குருகுதிர்முன் | 4 |
| குலமரபு | 14 |
| கொண்டலுறும் | 22 |
| கொம்புயர் | 21 |
| கோதைசோரிற் | 5 |
| கோலக்கொடி | 21 |
| கோவேமாலை | 14 |
| சூழிவன்மத | 11 |
| செங்கோல்வளைக் | 12 |
| செய்யவாய் | 13 |
| சென்றஞ்சி | 6 |
| ஞான்றவெள் | 11 |
| தனக்குரிய | 15 |
| தார்வட்டக் | 15 |
| திருவாணியைக் | 1 |
| திருவின்செம் | 17 |
| திரையிடுமி | 19 |
| துயக்குவித் | 18 |
| துளவுகண் | 22 |
| தொண்டைவேங் | 4 |
| தோளான்மெலி | 22 |
| நங்கள்கோத் | 12 |
| நல்குநந்தி | 16 |
| நன்றுங்கெடி | 7 |
| நாணுதித்திரு | 12 |
| நிற்கமன்னவர் | 8 |
| நீண்டதாங் | 21 |
| நூற்கடற் | 9 |
| நெஞ்சாகுல | 5 |
| பகரங்கொ | 11 |
| பகையின்றிப் | 19 |
| பட்டவேந்தர் | 20 |
| பதிதொறு | 7 |
| பாடியநாவல | 10 |
| பாவையர் | 21 |
| பிறைதவழ் | 18 |
| புயங்களிற் | 5 |
| புரவலனந்தி | 16 |
| புனத்துநின்ற | 10 |
| பொருப்பரையன் | 1 |
| பொழுதுகண்டா | 4 |
| மண்டலமா | 2 |
| மதியமெரி | 13 |
| மயில்கண்டான் | 9 |
| மலர்ச்சூழ | 16 |
| மறமதகரி | 5 |
| மாட்டாதே | 13 |
| மும்மைப்புவன | 1 |
| மொழியார் | 12 |
| வட்டன்றே | 18 |
| வலம்வரு | 21 |
| வளைவார்குழல் | 6 |
| வாடைநோக | 5 |
| விடுதிர்கொல் | 6 |
| விராவாத | 7 |
| வினையின் | 10 |
| வீரதீரனல் | 9 |
| வெண்சங் | 20 |
| வேண்டாரொண் | 19 |